ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 1591/15 – 2009 මාර්තු 05 වැනි බ්‍රහස්පතින්දා – 2009.03.05
1591/ 15 ஆம் இலக்கம் – 2009 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி III – காணிகள்

காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல. : பிராலே/ஹப/இ.அ4/1/58
காணி, காணி அபிவிருத்தி அமைச்சின் குறிப்பு இல. : எல்/டி/05/2007வீஈ/30.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ளஅரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கக் காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :

தென் மாகாணத்தில், காலி மாவட்டத்தில், ஹபராதுவ பிரதேச செயலாளர் பிரிவில் நாகந்த கிராம உத்தியோகத்தர்பிரிவில் நாகந்த கிராமத்தில் அமைந்துள்ள கா. 3642 இல ஆரம்ப வரைபடத்தில் துண்டு இல. 01 ;

01. **துண்டு இல. 01**
காணியின் பெயர் : பங்சாலிய குருந்து வத்த அல்லது மஹஹேன ; விபரம் : வீட்டுத் தோட்டம் ; உரிமை கோருபவர் : எம். எம். சந்தரசேன, மஹஹேனவத்த, நாகந்த, அஹங்கம ; விஸ்தீரணம் : 0.0277 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2009.04.29 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு ஹபராதுவ பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2009.04.22 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

லால் சமரசேகர,
பதில் பிரதேச செயலாளர்,
ஹபராதுவ.

பிரதேச செயலகம்,
ஹபராதுவ,
2009.02.25.

03 – 472

திருத்தம்

காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : நா/இ/1/அத்/2005/01.
காணி அமைச்சின் இல. : எல்டீ/05/2007/யூடீஎ/218.

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தில், நாத்தாண்டிய பிரதேச செயலாளர் பிரிவில், மெத பலாத்த சிறு பிரிவில், மேல் கடுனேரி கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவை நாயகத்தின் இல. புத்/நாத்/2007/04/17 மற்றும் 2007.10.31 ஆந் திகதிய மூல வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளபடி பரப்பளவில் 0.607 ஹெக்டயார் அளவுள்ள துண்டு ஏ மற்றும் பீ எனப்படும் "கோம்கஹவத்த" எனும் காணி :

இல. 1581/7 கொண்ட *அதிவிசேட வர்த்தமானியில்* குறிப்பிடப் பட்டுள்ள திகதிகள் பின்வருமாறு மாற்றப்படுகின்றன என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2009.01.28 ஆந் திகதி பி. ப. 2.30 மணிக்கு என்பது 2009.04.22 பி. ப. 2.30 மணிக்கு நாத்தாண்டிய பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2009.01.12 ஆந் திகதி என்பது 2009.04.06 ஆந் திகதிக்கு முன்னரும் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எஸ். எல். எம். சந்திரசிறி,
பிரதேச செயலாளர்,
நாத்தாண்டிய.

பிரதேச செயலகம்,
நாத்தாண்டிய,
2009.03.03.

03 – 473

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.